பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 07 2025 **SATURDAY** 7 15 **AM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஐந்து நாடுகள் சுற்றுப் பயணத்தின் மூன்றாவது கட்டமாக இன்று அர்ஜென்டினாவில் அந்நாட்டு அதிபர் திரு. **Javier Milei** -யை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளில் மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. ஈரான் எண்ணெய் ஏற்றுமதி மீது அமெரிக்க புதிய தடைகளை விதித்துள்ளது.

4. ஹிமாச்சலப் பிரதேசம், குஜராத் உள்ளிட்ட 8 மாநிலங்களில் இன்று பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 244 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஐந்து நாடுகள் சுற்றுப் பயணத்தின் மூன்றாவது கட்டமாக இன்று அர்ஜென்டினாவில் அந்நாட்டு அதிபர் திரு. **Javier Milei** -யை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

அர்ஜென்டினாவின் விடுதலைப் போராட்ட வீரரும், அந்நாட்டின் தேசதந்தையுமான ஜென்ரல் **Josedesan Martin** சிலைக்கு மரியாதை செலுத்தவுள்ளார்.

முன்னதாக, போர்ட் ஆப் ஸ்பெயினில் உள்ள **Trinidad Tobago** நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க உரை நிகழ்த்திய பிரதமர், இந்தியாவில் ஜனநாயகம் என்பது வெறும் அரசியல் அமைப்பு அல்ல, மக்களின் வாழ்வியல் முறையாக உள்ளது என்று கூறினார்.

இந்தியாவுக்கும், டிரினிடாட் டொபோகோவுக்கும் இடையேயான உறவுகள் நூற்றாண்டுகள் பழமைவாய்ந்தது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, ஜனநாயக மாண்புகளை வலுப்படுத்துவதில் இந்தியாவும், **Trinidad Tobago**-வும் உயர்ந்த லட்சியங்களுடன் செயல்பட்டு வருவதாகவும் பிரதமர் கூறினார்.

பயங்கரவாதத்தை எதிர்த்து வலுவுடன் போராட முன்வருமாறு சர்வதேச சமுதாயத்தை அவர் கேட்டுக் கொண்டார்.

பயங்கரவாதம், அமைதியான சமூகத்திற்கு எப்போதும் அச்சுறுத்தலாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா சபை போன்ற சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று சுட்டிக்காட்டிய பிரதமர், வளர்ந்து வரும் நாடுகளுக்கு அதில் உரிய பொறுப்பினை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**Trinidad Tobago** பிரதமர் திரு. **Kamla Persad** -டுடன் விரிவான பேச்சுக்கள் நடத்திய பிரதமர் திரு. நரேந்திர மோடி, பொருளாதார உறவுகளையும், பேரிடர் மேலாண்மை, பருவநிலை மாற்றம், பாதுகாப்பு, தொழில்நுட்பம், சுகாதாரம், வேளாண் ஆராய்ச்சி ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த பேச்சுக்களின் இறுதியில், கட்டமைப்பு மற்றும் மருந்து உற்பத்தி ஆகிய துறைகளில் ஒத்துழைத்து செயல்பட வகை செய்யும் 6 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, **Trinidad Tobago** அதிபர் திருமதி. **Christine Carla Kangallo**-வை சந்தித்து பேசினார்.

15 கரீபியன் நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட **Caricom** அமைப்பின் செயல்பாடுகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

**<<<<<<>>>>>>**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரேஸில் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் நாளை முதல் இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள பிரிக்ஸ் நாடுகளின் உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

பிரரேஸில் நாட்டிற்கு கடந்த 60 ஆண்டுகளில் இந்தியப் பிரதமர் ஒருவர் செல்வது இதுவே முதல்முறையாகும்.

பிரேஸில் அதிபர் திரு. **Luiz Inacio Lula Da Silva-**வை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

பிரிக்ஸ் உச்சிமாநாட்டினிடையே, பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் சந்தித்து பேசவுள்ள பிரதமர், தொழிலதிபர்கள் பங்கேற்கும் கூட்டதிலும் உரையாற்றவுள்ளார்.

**<<<<<<>>>>>>**

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளில் மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்டிர மாநிலம், புனேயில் தேசிய பாதுகாப்பு அகாடமியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், 2014ஆம் ஆண்டு முதல் நாட்டில் கட்டமைப்பு வசதிகள், தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

தற்போது இந்தியப் பொருளாதாரம் உலகில் மூன்றாவது இடத்தில் உள்ளதாகவும், 2047ஆம் ஆண்டு முதலாவது இடத்தை அடையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கோவிட் காலத்தின் போது, இந்தியா, உலக சுகாதாரதிற்கு மிகப் பெரிய பங்களிப்பை செய்ததாகவும் அவர் கூறினார்.

நாட்டில், கடந்த 11 ஆண்டுகளில் மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் 15 கோடி கழிப்பறைகளை மத்திய அரசு கட்டியுள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

இஸ்ரேல் உடனான போர் நிறுத்தம் முடிவடைந்த நிலையில், ஈரான் மீது அமெரிக்கா புதிய பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

அந்நாட்டிலிரந்து எண்ணெய் ஏற்றுமதி செய்ய அமெரிக்கா தடை விதித்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்டில் உள்ள சில எண்ணெய் நிறுவனங்கள், ஈரானிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து, அதனுடன் ஈராக் கச்சா எண்ணெயை சேர்த்து ஏற்றுமதி செய்வதாக வந்த தகவலை அடுத்து, அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளனர்.

ஈரான், தனது வருவாயை பெருக்கிக் கொள்வதற்காக இத்தகைய வழிமுறைகளை கடைபிடிப்பதாகவும், மேலும் அந்நாடு எரிசக்தி வளத்தைப் பயன்படுத்தி தீவிரவாத அமைப்புகளை ஊக்குவித்து வருவதாகவும், எனவே. அந்நாட்டின் எண்ணெய் ஏற்றுமதி மீதான தடை நியாயமானது என்றும் அமெரிக்க நிதித்துறை செயலாளர் திரு. **Scoot Bessent** தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>>**

வர்த்தக ஒப்பந்தங்களை பொறுத்தவரை இந்தியா தனது சொந்த நலன்களை ஒருபோதும் விட்டுத் தராது என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஸ் கோயல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் குறித்து, புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், எந்தவொரு நாட்டுடனும், இந்தியா வர்த்தக ஒப்பந்தம் செய்யும் போது, பரஸ்பர நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் என்று கூறினார்.

தேசிய நலனை கருத்தில் கொண்டே, ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் என்றும், அமெரிக்கா, ஐரோப்பா, நியூஸிலாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடன் ஒப்பந்தங்களுக்கான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

ஊட்டச்சத்து மேலாண்மை இயக்கத்தின் ஒரு பகுதியாக, காய்கறிகள் மற்றும் பழச்செடிகள், விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் திருப்பத்தூர் மாவட்டத்தில் மானியத்துடன் செடி மற்றும் விதைகளை வழங்கவுள்ளதாகவும் இதனை பொதுமக்களும் விவசாயிகளும் பயன்படுத்தி, பயனடையுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து இன்று காலை 6 மணி நிலவரப்படி வினாடிக்கு 50 ஆயிரம் கனஅடியாக உள்ளது.

நீர்வரத்து, அதிக அளவில் இருப்பதால் ஒகேனக்கல் அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்கவும், பரிசல்களை இயக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஹிமாச்சலப் பிரதேசம், குஜராத் உள்ளிட்ட 8 மாநிலங்களில் இன்று பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உத்ராகண்ட், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், மஹாராஷ்ட்ரா, சத்திஷ்கட், கோவா, மேற்குவங்கம் மற்றும் கடலோர கர்நாடகாவிலும் பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசத்தில் கடந்த இரு வாரங்களாக பெய்த கனமழையால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 43 ஆக அதிகரித்துள்ளது.

37 பேரை காணவில்லை என்றும், அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

மேகவெடிப்பு, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக அம்மாநிலத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள பெரும்பாலான நதிகளில் வெள்ளம் அபாய கட்டத்தை தாண்டி ஓடுகிறது.

இந்நிலையில் ஒடிசா, மத்தியப்பிரதேசம், ஆகிய மாநிலங்களில் பெய்த கனமழையால் சில மாவட்டங்களில் தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது.

<<<<<<>>>>>>

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 244 ரன் முன்னிலை பெற்றுள்ளது. பர்மிங்காமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாவது நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா 2வது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 64 ரன் எடுத்தது. முன்னதாக இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 407 ரன்னுக்கு ஆட்டமிழந்தது. இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 587 ரன் ஆகும்.

<<<<<<>>>>>>

நடப்பு உலக சாம்பியன் இந்தியாவின் குகேஷ், ரேபிட் செஸ் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

குரேஷியாவில் நடைபெற்ற போட்டியில், 19 வயதான இந்திய வீரர் குகேஷ், 38வது காய் நகர்த்தலில் அமெரிக்காவின் வெஸ்லியை வென்றார்.

இந்த போட்டியில் பங்கேற்ற மற்ற இந்திய வீரர்களான பிரக்ஞானந்தா மற்றும் ரமேஷ்பாபு ஆகியோர் 9 புள்ளிகளுடன் நான்காவது இடத்தைப் பிடித்தனர்.

<<<<<<>>>>>>

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து 5 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், திண்டுக்கல் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் சேப்பாக்கம் அணியை வென்று, இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

<<<<<<END>>>>>>